6

கற்பகம் பற்றிய தொகுப்புக்கள்.

1992

203

284. அனுபவவைத்தியம்

அனுபவ வைத்தியம்
தொகுப்புகள், உடையாம்
இணைந்து
வெளியிடலாம்
23/3/97

1992
April

284. அநுபவவைத்தியம்

ஏடு எண் : 284

பெயர் : அநுபவவைத்தியம்

அளவு : 19 x 3

வரி : 7

ஏடு எண்ணிக்கை : 78

உரைநடை

எடுத்த தேதி : 1.4.92

முடித்த தேதி : 22.4.92

மொத்த பக்கங்கள் : 79

படி எடுத்தவர் : த.லைட்சுமி.

284. அனுபவ வைத்தியம்

உ

பொருளடக்கம்

உ
1

18 - கிட்டத்துக்கு மருந்து.

கருப்பு கழுதை எலும்பை பொடியாய் நிலத்துமூடு தயாலம் இறக்கி தினம் அஞ்சு (ஐந்து) பணவிடை வெத்திலையால் நடவா 40-நாள் தின்ன வெண்குட்டந் தீரும்.

பெரும்பாட்டுக்கு,

எருமை தயிராவது பசுவான் தயிராவது வார்த்து கொட்டைச்சே எண்ணை இறக்கிற பக்குவ ——

(X) not for printing

அரையாப்பு - பக்கப்பிளவைக்கு மருந்து

இந்துப்பு, சோற்றுப்பு, வளையலுப்பு, ரசம் காசிடை, மிளகு காசிடை இலுப்பைப் புண்ணாக்கு காசிடை, ஓமம், சீரகம், வெந்தயம், கடுகு, வேப்பிலை நாயுருவியிலை ஒவ்வொரு காசிடை கூட்டி எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து 3. நாள் கட்டவும். அரையாப்புக்கும் ஹப்புருதக்கும் (இந்தப்படி கட்ட போம் ஒரு? தண்ணீர் மீட்டாங்கிழங்கு நாக்கை கட்ட பிளவை தான் கரைந்து போம்.

கெந்தக தயிலம்

நெல்லிக்காய் கெந்தகம் பலம் - 5,
ஜீரம் காசிடை - 2, சாரம் காசிடை - 2 வெடியுப்பு
பலம் - 2 அரிதாரம் காசிடை - 3 பசுவின்நெய்
பலம் - 5 இதுகளை நெய்விட்டரைத்து வெள்ளைச்
சீலையில் தடவி கரி நெருப்பாக்கி சுட்டு வைத்து சீலையை
சுட்டு நெருப்பில் வைத்தால் தயிலம் இறங்கும்
அதை எடுத்து பிராங்கி சக்கை பதங்கத்தில் வைத்து ... வைத்து
இரணத்தில் தயிலம் காசிடை வைத்து சாப்பிடவும்.
தீரும் வியாதி - திமிர் வாய்வு, படைதிமிர் இதுகள்
தீரும். பத்தியம். இச்சா பத்தியம்.

மாந்த எண்ணெய் கோழை சுவாசத்துக்கு

வேலிப்பருத்தி, கற்பூரவள்ளி,
கொடிக்கள்ளி, துளசி, கஞ்சாங்கோரை இதுகள்
சமம் கொண்டுவந்து இடிச்ச ரசம் உழக்கு விளக்
கெண்ணெய் பலம் எத வேப்பம் பட்டை பலம் - வ
சித்திரமூலம் பலம் - வ அக்கிரகாரம் வராகனிடை - 1
கன்றாவட்டகம் வராகனிடை - 1 ஏலம் வராகனிடை - 1
இந்த தினுசுக்களை வெள்ளாட்டுப்பால் விட்டரைத்து
எண்ணெயில் கலந்து காய்ச்சி வடிகட்டி கற்கமருந்து
கோரசனம் வராகனிடை - 1 திப்பிலி வராகனிடை - 1
சுக்கு வராகனிடை - 1 இதுகளை சின் எண்ணெய்விட்டு
எண்ணெயில் கலந்து இருக்கவும்.

சூதகம் உடைக்க மாத்திரை

வெடியுப்பு பலம் ரூ, முருங்கையிலை
ரசம் விட்டு பொரித்து கல்வத்தில் போட்டு ஆ
சாம்புராம் 4 ரூ கற்பூரம் -4- ரூ இந்த மூன்றும்
அரைத்து மாத்திரை செய்து 3-பொழுது கொடுக்கவும்
சூதகம் உடைந்து வெளிப்படும்.

வெள்ளைக்கு லேகியம்

வால்மிளகு பலம் - 4, கசகசா
பலம் - 2 வெள்ளைச் சர்க்கரை பலம் - 6 நெய் பலம் - 5
சரக்கு இவ்வளவும் பொன்வறுப்பாய் வறுத்து
நெகிழ அரைத்து சர்க்கரை கலந்து லேகியம் செய்து
சாப்பிடவும். —

வெள்வங்க பற்பம்

வெள்வங்கம் பலம் - 1 ரசம் பலம் - -
இரண்டையும் தொந்தித்து கற்பூர சிலாசத்து பலம் - 1
கூட கல்வத்தில் போட்டு திருநீர் கல் சுண்ணாம்பு
போட்டு கலக்கி தெளிவெடுத்து அதை விட்டு அரைத்து
வில்லை தட்டி காய வைத்து புடம் போட பற்பமாம்
20. எருவில் போடவும்.

வெண்குட்டத்துக்கு - நெய்

பசுவின்நெய்படி - ஐ வாங்கி அதில் வெள்ளை சிறுக்கம் பட்டையை பசுவின்பால் விட்டரைத்து நெய்யில் கரைத்து பதமாய் காய்ச்சி இறக்கி அந்திசந்தி மூன்றுநாள் சாப்பிடவும். கடுமை பத்தியம் மறுபத்தியத்தில் வறுத்த உப்பும் புளியும் போட்டுக் கொண்டு சாப்பிடவும்.

சர்வ சுரத்துக்கு

சாத்திரபேதி, வெள்ளை பாசாணம் துத்தம், துருசு இதுகளை சுத்திசெய்தது கல்லாரகனை - 1 செம்பை சாறு விட்டு இரண்டு நாள் அரைத்து பயறளவு உருண்டை பண்ணி நிழலுலர்த்தி அனுபான அரைத்து வேளைக்கொரு உருண்டை மூன்றுநாள் இரண்டு வேளையும் கொடுக்க சகல சுரமுந் தீரும்.

வயிறு கடுப்புக்கு

அபினி - பூ - 1, வேப்பம் பழம் - 1 கஞ்சா பலம் - 2 உளமத்தை சாத்திரி வரைத்து உருண்டை பண்ணி தயிரிலிடத் தீரும்.

காதில் சீழ்வடி இரைச்சலுக்கு

ஆதண்டை இலையை சிறப்பாளர் நசுக்கி மெல்லிய துணியில் பொட்டணமாய்க் கட்டி 7 - நாளைக்குக் காதிலிடவும்

மேகவெட்டை

பெருஞ்சீரகம், சீரகம், அதிமதுரம் கருவாய்ப் பட்டை வகைக்கு பலம்-1 கொத்தமல்லி சித்தின தவசு பலம்-6 சர்க்கரை பலம்-2 கல்க்கி வெருகடி பிரமாணம் 40-நாள் கொள்ளவுந் தீரும் ஆயாதிகள் பிரமேகம் காசரோகம் ஊளையாரத்தி யுண்டு பெண்கள் மூன்று திங்கள் சாப்பிட்டால் பிள்ளையுண்டாகும் இச்சா பத்தியம் இதுகை கண்டது. ✓

கடத் பாண்ட நெய் பண்ணும் உபரம் ✓

ஆசனைக்காய், வெள்ளைப் படிம், கருப்பஞ்சாறு தண்ணீர் விட்டான் கிழங்கு வகைக்கு 1 நாழி-1 பசுவின் நெய் நாழி-தவ பசும்பால் ... நாழி சந்தனம் திரிகடுகு, திரிபலை, வெட்பாலரிசி, சாதிக்காய் சித்தக்காசு, லவங்கம், சீரகம், விலாமிச்சம் வேர், இருவேலி வேர், செண்பகப்பூ, கருஞ்சீரகம் திருநாவந்றி, செங்கழுநீர்க் கிழங்கு கோஷ்டம், தற்கோல்ப் பொட்டு அதிமதுரம், குளகநீரு, தாழைப் படிம், மந்திசட்டி பேரீச்சம் படிம், ஓமம் கடுகுரோகணி கண்டங்கத்திரி தாமரை வளையம் அமுக்கிறாங் கிழங்கு இந்துப்பு பச்சைக்கல் வகைக்கு பலம்-1 இவைகளெல்லாம் உரலில் போட்டு துவைத்து பாண்டத்திற் போடு அணிந்து

விட்டு பதினாறில் ஒன்றா வடிகட்டி மின்சாறு வகைகளால் ஒசாறு நெய்பால் விட்டு அடுப்பேற்றி மெழுகு பதத்தில் வடிகட்டி கரண்டிவீதம் அந்தி அந்தி சாப்பிடவும். இதுக்கு தீரும் வியாதிகள் மேகம் 21, சுருக்கும், பெரும்பாடு சவலைச் அஸ்தி அஸ்திசுரம் அஸ்தி வெட்டை இவைகள் தீரும் இச்சா பத்தியம்.

மேகத்துக்கு, பெரும்பாட்டுக்கு பிரமயத்துக்கு
சுருக்கு - இதுகள் தீரும் வெண்ணை

நல்லெண்ணை பலம் - 5 பசுவின்

நெய் பலம் - 5 பசும்பால் படி - ஙு இதுகள் மூன்றையு சட்டியில் ஒன்றாய் வார்த்து அடுப்பில் வைத்து கருகுதிரளாக காய்ச்சி வடிகட்டிக் கொண்டு மறுபடியும் சட்டியில் வார்த்து அடுப்பேற்றி வெள்ளை குங்கிலியம் பலம் 20 பொடிசெய்து கொதிக்கிற யெண்ணையில் போட்டு உடனே பெரிய சட்டியில் நாலுபடி தண்ணீர் விட்டு அதில் எண்ணையை வார்த்து மத்தால் கடைந்தால் வெண்ணை வரும். அதை எடுத்து அந்திசந்தி இரண்டு வேளைக்கும் கொடுக்கவும். இச்சா பத்தியம். மோர் பால் சுகையான தர்க்கவும்.

கீழாநெல்லித் தயிலம்

கீழாநெல்லி தூக்கு -1 இளநீரால் போட்டு எட்டிலொன்றாய் காச்சி வடிகட்டி எண்ணெய்படி -2, பால்படி -2 சீரகம் பலம் -2 பாலிலாட்டவரைத்து எண்ணெயில் கரைத்து மெழுகு பதத்தில் வடித்து முழுகிவர தீரும் வியாதிகள்: பித்தவெட்டை, மயக்கம், மஞ்சள்காமாலை, வாந்தி தலைமயம், வாயூரல், உட்சுரம், நருக்கல் இதுகள் தீரும்.

கண்த்தைலம்

...கொட்டை எண்ணெய்...

? கஸ்தூ.. சாறு, குரணிச்சாறு, குமரிச் சாறு, நீருள்ளிச் சாறு, கோவைச் சாறு, புளியாரைச் சாறு, கற்பூர வல்லிச்சாறு வகைக்கு சாறுபடி -வ. சாதிக்காய், சாதிபத்திரி, மாசிக்காய், கந்தகச் சிலசி

? கோஷ்டம் அக்கிராகாரம் சீரகம் கழஞ்சு -2 வெந்தயம், பத்திரி, பட்டை வெள்ளுள்ளி வகைக்கு கழஞ்சி -1 ஆவின்பால்படி -1 மேற்படி சரக்கு கல்வமையில் ஆட்டியாட்டி எண்ணை கரைத்து அடுப்பேற்றி மெழுகு பதத்தில் வடித்து குங்குமப்பூ கோரோசனை சாதிக்காய் வகைக்கு கழஞ்சு -1 பொடித்து எண்ணெயிற் கலந்து கழஞ்சி நிறையாக குழந்தைகளுக்கு கொடுத்து வரவும். தீரும் வியாதி வெட்டை, சுரம், மாந்தம், உப்பசம் இளமை அனேக வியாதிகள் தீரும்.

இருமலுக்கு - இம்பூறாதி லேகியம்

காயவேர் பலம்-10, வெள்ளைச் சார்வளை வேர் பலம்-4 தாளிசபத்திரி பலம்-5 சுக்கு, திப்பிலி, ஏலம், லவங்கம், லவங்க பட்டை லவங்க பத்திரி, மிளகு, வகைக்கு பலம்-உ, நெய் பலம்-5, தேன் பலம்-உ பனவெட்டு கற்கண்டு பலம் 25 மரூ சாறாக் கொண்டு இருந்தால் வெள்ளைச்சார் வளைவேரை நிறுத்தி ஆடவும். பாகு செய்து லேகியம் கிண்டவும்.

தாதுபுஷ்டிக்குத் தயிலம்

சாம்பிராணி பலம்-6 கொண்டு வந்து சின்ன குவளையில் சாம்பிராணியை தூள்செய்து குவளையில் போட்டு அந்த குவளைக்கு உதடைப்போல கோபுரம் போல் கட்டி அந்த கொம்பைச்சுற்றி காகிதத்தால் மறைத்து அப்படி போல் துளைகள் வைத்து மத்தில் அகலில் தீயைப்போட்டு நல்லெண்ணை வார்த்து எரிக்கவும். அப்போது மேல் காகிதத்தில் அப்பம் படரக் கொள்ளும் அந்த சூவை யெடுத்துக் கொண்டு ஒரு சேர் நெய்யில் சாம்பிராணி அப்பமும் சாதிப்பத்திரி பலம்-உ சாதிக்காய் பலம்-உ நல்லெண்ணெய்யில் போட்டு மெழுகு பதத்தில் இறக்கிக் கொண்டு 5 வராகனெடை தயிலம் உள்ளுக்கு சாப்பிடவும் வீரியம் நீடித்து நிற்கும் ஆட வேண்டுமென்றால் இதை எருமைப்பால் படி சாப்பிடவும் மாந்து ஆடுந்து போகம் இது கைகண்டது.

மூத்திர தௌவுக்கு கசாயம்

கடலழிஞ்சிப் பட்டை, சன்னலங்க பட்டை, மூங்கில் சிறான மேல்த் தோல், மிளகு பரங்கிச் சக்கை வகைக்கு பலம்-1 இதுகளை இடித்து ஒருபடி தண்ணீர் விட்டு நால்படி இறக்கி சட்டியில் வார்த்துக் கொண்டு வால்மிளகு பலம்-3 இந்துப்பு பலம்-1 இரண்டையும் இடித்து இரண்டு சட்டியில் போட்டு அதுக்கு தண்ணீர் சட்டி நிறைய விட்டு சாறுகுடி, தொட்டியில் நல்ல தண்ணீர் விட்டு சட்டி தங் செய்து, சட்டி தண்ணீர் இரண்டு பலம் கசாயம் அரைபலமும் கூட்டி இருவேளை கொடுக்கவும். நீர் தௌயும்.

சாந்த சந்திரோதய மாத்திரை

ஆரம் ஹிராகனிடை-1, வெண் காரம் ஹிராகனிடை-த மஞ்சள் ஹிராகனிடை-3 அரைப்பு எலுமிச்சம் பழச்சாறு யிந்த மாத்திரைக்குக் கசாயம். **அதிமதுரகசாயம்** அதிமதுரம் பலம்-௨ சீரகம் பலம்-௨ திப்பிலி பலம்-வ ஏலம் பலம் ரூ சர்க்கரை சேர்த்து கசாயமிடவும். சாப்பிடவும்.

குழந்தை மந்தத்துக்கு கசாயம்

பெருவிதைங்கள் உப்பை அரைத்து தடவி ? குழம்... போட்டு எடுத்து உப்பை தட்டி விட்டு கொடிஞ்சி பட்டை, சாயப் பட்டை சுக்கு மிளகு காட்டுச் சோறு கரிசலாங்காணி இதுகள் சமபலாக்கி கருக்கி, ஆடையும் பொரியப் போட்டு தண்ணீர் விட்டு காய்ச்சி கொடுக்கவும்.

பிள்ளைகளுக்கு அளப்பு இருந்தால் கசாயம்

கோடிச்சொறி, மாசி, கரிசலாங் கண்ணி, வசம்பு, பெருங் கிழங்கு, அங்கயாளை, வேப்பன் இலை சாம்பல் செய்து ஓமம் கருஞ்சீரகம் பொரியவிட்டு தண்ணீர் விட்டு காச்சிக் கொடுக்கவும்.

வாய்வுக்கு செந்தூரம்

ரசம், லிங்கம், வீரம், நவச்சாரம் ரசசெந்தூரம் வகைக்கு வராகனெடை-1 ....
அரைப்பு அரைத்து தோசை செய்து காரம் வாற வைத்து 10 மேலே சுத்தி மணல் கீழ் பரப்பி மருந்தை வைத்து மேலே அனல் பரப்பி 10 எருதால் [ஏ] புடம் போட்டு எடுத்து பொடி செய்து வைத்துக் கொள்ளவும்.

சண்ட மாருத செந்தூரம்

சூதம் வராகனெடை-1, லிங்கம் வராகனெடை-8 கெந்தி வராகனெடை-2 வீரம் வராகனெடை-2 ரசசெந்தூரம் வராகனெடை-2 இதுகளை அரைத்து எடுத்து கொள்ளவும்.

பேதிக்கு-கசாயம்

தேன் துணியால் துவைத்து மாதை சான்னாம்பு கொண்டு ஜூட்டியால் [சு] போட்டு சாம்பலாக்கி நாவு லிங்கம் [ரகம்] பொரிய விட்டு தண்ணீர் விட்டு காச்சி குடுக்கவும்.

!!

பித்தகசாயம்

மிளகு, வட்டத்திருப்பி இதுகள் சமபலமாக்கி தண்ணீர்விட்டு சன்னமாவிட்டகம் சுக்கு, அதிமதுரம் திம்பராவிட்டகம் இதுககசாயம் போடவும்.

சூதக வாய்வுக்கு நெய்

இந்துப்பு பலம்-1, சவுக்காரம் பலம்-1 வாளம் பலம்-2 பெருங்காயம் வராகனெடை-4 வெள்ளைப்பூண்டு பலம்-7 தேங்காய்-8, பசும் பால்படி-2 நெய் படி-1 நாலுபடி தண்ணீர் விட்டு ஒரு சட்டியால் வார்த்து தேங்காயை திருவி சட்டி. பா.வ்: தேங்காய்ப்பூ பாதி பரப்பி அதில் வெள்ளைப் பூண்டு செய்து நசுக்கி பாதி அதில் வைத்து மத்தியில் கடை சரக்கை கல்வத்தில் கனிக்கு அரைத்து மேலே தட்டி நடுவே வைத்து அதின்மேல் பூண்டு வைத்து மேல்பூவை வைத்து சட்டி மூடி சீலை செய்து மெதுவாய் ? எரித்து சிறுக தண்ணீர் இறக்கி அதில் இதுகளை கரைத்து கலக்கி நெய்யும் பாலும் காய்ச்சி இறக்கி கொள்ளவும்.

முறைகாச்சலுக்கு நிலகண்ட மாத்திரை

மயில்துத்தம் பலம்-4, வெள்ளைப் பாசாணம் பலம்-3, வாளம் பலம்-2 சாந்திரபேதி பலம்-1 அரைப்பு பசுவின் மோர் கொண்டு நாலுசாமம் அரைத்து பயறு பிரமாணமாத்திரை செய்து மோருசாதமும் கொடுக்கவும் அல்லது அரப்பளவிர வைத்து ககுக நல்லெண்ணெ தள்ளி சாதம் கொடுக்க சுரம் அகலும்.

மேகாதிகுடோரி

சித்தாமணக்கெண்ணைபடி - 1,

கொமச்சார் படி - $\frac{1}{2}$ இளநீர் படி - $\frac{1}{2}$ பால்படி - $\frac{1}{2}$ பழச்சார்படி $\frac{1}{2}$. ? . கடுக்காய்தோல் பலம் - 1 . சுக்கு . மரம் $\frac{1}{2}$.
மருந்தை பால்விட்டு அரைத்து சாத்தில் கரைத்து காச்சி மெழுகு பதத்தில் இறக்கிக் கொள்ளவும். பத்தியமில்லை.

சன்னிதோஷம் - கஷாயம்
நாவரட்சி இவைகளுக்கு

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி கண்டுபரங்கி தும்பராஷ்டகம் வகைக்கி பலம் - $\frac{1}{2}$ நறுக்கி போட்டு படி தண்ணீர் விட்டு காச்சி குடிக்கவும். நாவரட்சி தீரும்.

ஆலம் விழுது, ஆலம்பாலை, ஆலம் பட்டை இவை மூன்றும் பொன் வறுவலாய் வறுத்து படி தண்ணீர் விட்டு இறுக காச்சி குடிக்க தாகம் தீரும்

தாகத்துக்கு - கஷாயம்

நெல்லிவயோரி, தேங்காய்பிஞ்சு நெல்லிபருப்பு சந்தனகட்டை எலுமிச்சம்பழத்தோல் சீதாபழம் இவைகளை சமன் இடித்து போட்டு படி தண்ணீர் விட்டு காச்சி குடிக்கவும் தாகம் தீரும்.

இளைக்கு ஏ·கிக்கு

ஆதாரம், இந்துப்பு, திப்பிலி வகைக்கு பணவிடை - 4 பொடி செய்து மருப்புகரண்டியால் வெந்து அரை பணவிடை இஞ்சி சாத்தில் குடிக்கவும் பரிகாசம் - உள் மாந்தை தீரும்.

மணிமந்திராதி லேகியம்

இந்துப்பு கழஞ்சு-1, சீரகம் கழஞ்சு-2, ஓமம் கழஞ்சு-3, சுக்கு கழஞ்சு-4, திப்பிலி கழஞ்சு-5 இவை அந்தையுட இதுக்கு பாதிக் கடுக்காயும் கூட்டி சூரணம் பண்ணி இருத்து கடுக்காய் கஷாயம் வைத்து படியாக வடித்துக் கொண்டு பனைவெல்லம் பலம்-8 கலந்து லேகிய பக்குவமாய் இறக்கிக் கொண்டு பயறு பிரமாணம் கொள்ள தீபனமுண்டு வாய்வு குன்மம் மூல ரோகம் இவைகள் தீரும்.

சங்கத்திராவகம்.

பொட்டிலுப்பு பலம்-5 இந்துப்பு பலம்-1 படிகாரம் பலம்-4 சாரம் பலம்-1 கறியுப்பு பலம்-1 இதுகளை தூளாக்கி பானலில் போட்டு திராவகம் இறக்கிக் கொள்ளவும்.

பித்தத்துக்கு அதிமதுரச் சூரணம்.

இஞ்சி பலம்-3, அதிமதுரம் பலம்-1 சீரகம் பலம்-2 திப்பிலி பலம்-½ ஏலம் பலம்-½ இடித்து சூரணஞ்செய்து வெள்ளை சர்க்கரை சமன் கலந்து உள்ளுக்குச் சாப்பிடவும். இச்சா பத்தியம்.

பித்தத்துக்கு கஷாயம்

கோரைக்கிழங்கு, சுக்கு, குந்திரம் கொடி, வில்வவேர், கொத்தமல்லி பேய்புடல் கடுக்காய்தோல் சித்திரமூட்டி திப்பிலி அசைக்கு பலம்-1 இதுகளை எல்லாம் ஒன்றாய் இடித்து 3 பங்கிகாக்கு ஒருபடி தண்ணீர் விட்டு ஒருபங்காக போட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி அந்திசந்தி சாப்பிடவும்.

பித்தத்து கசாயம்

சீரகம், கொத்தமல்லி, சுக்கு, நன்னாரி வேர், தாமரைப் பூ, சீமை, ரோசப்பூ, வெட்டி வேர், ஏலரிசி, அதிமதுரம், மிளகு வகைக்கு பலம்-உ இதுகளை ஒன்றாயடித்து மூன்று பங்காக்கி ஒருபங்கில் 2படி தண்ணீர் விட்டு எட்டிலொன்றாய் காய்ச்சி கசாயமெடுத்து அந்தி சந்தி அரை ஆழாக்கு சாப்பிடவும். அதில் இல்கந்து இலக்கந்து பலம்-1 சேர்த்து சாப்பிடவும் பித்தம் மாறும்

கசாய திறுசுகள்

முக்கத்தாரி... மிளகரணை, ~~மிளகரணை~~ மூலகறணை, சங்கம் பட்டை, மறுளங்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, கொடி வேலி தண்ணீர்விட்டான் கிழங்கு சித்திசார்வளை அமுக்கிறாங்கிழங்கு சதுரக்கிழங்கு நன்னாரிவேர் வகைக்கு பலம் — 1 பெருங்கிழங்கு —

சார் திறுசுகள்

நெல்லருகி, பொடுதலை, கரிசலாங் கண்ணி கிரந்தை இறவு தேங்காய் சிலந்திநாயகம் நுணாயிலை மிச்சங் கொட்டையிலை மாமயிலை செருப்படை முடக்கொத்தான் வகைக்கு படி - ¼

தைலசரக்கு திறுசுகள்

கருஞ்சீரகம், சீரகம் நீரடிமுத்து கார்போக காரிசி தாதை வால்மிளகம் மரமஞ்சள் கஸ்தூரிமஞ்சள் வால் மிளகு, சடமாஞ்சில் லவங்கப்பட்டை வெண்காயம் கோராசனை, ஏலம் பலம்-உ மஞ்சள் தான்றிக்காய் கடுக்காய் வகைக்கு -5 பலம் -த சித்தாமணக்கெண்ணை கோரோசனை கிலா நெல்லிக்காய் ஒன்று —

பயாரவ மாத்திரை

லிங்கம், நாபி, சுக்கு, மிளகு, வெங்காரம் ரசம் வகைக்கு பலம்-1 அரைப்பு பழச்சார் நாலு சாமம் அரைக்கவும். காச்சலுக்கு இஞ்சிச் சாற்றில் குடுக்கவும் வாதசுரத்துக்கு நொச்சிலை சாற்றில் குடுக்கவும். சேத்தும சுரத்துக்கு கண்டங் கத்திரி கஷாயத்தில் குடுக்கவும். பயித்திய சுரத்துக்கு சர்க்கரையில் குடுக்கவும். காச்சலுக்கு தேன்திப்பிலியில் குடுக்கவும் திரிதோசத்துக்கு நொச்சிலை ...... ஆடாதொடை, திரிகடுகு இதுகள் கஷாயமாட்டு மருந்து குடுக்கவும்.

ரோணிக்கு மாதளங்காய்புடம்

அசமதாகம், வெந்தயம், இலவம் பிசின், பொல்த்தகா, குறுசாணி ஓமம் வலம்புரிக்காய் அமாணி வகைக்கு பலம்-[illegible] சாதிக்காய், சாதிபத்திரி லவங்கம் வகைக்கு தூராகணடை-2 கஞ்சாபலம்-[illegible] இதுவெல்லாந் தூள் பண்ணி மாதளங்காய உடைத்து இருவையில் தண்ணீர் வார்த்து இலைகட்டி சீலைமேல் வைத்து மேல்சட்டி மூடி சாமம் வெந்தமாறகு அரைத்து தேத்தாங் கொட்டை பிரமாணம் உருண்டை பண்ணி உலர்த்தி சுரம் யில்லாவிட்டால் தயிரில் குடுக்கவும். சுரமிருந்தால் வெந்நீரில் குடுக்கவும் ரோணிகள் குதலாணதுபதுகள் தீரும். இச்சாபத்தியம்.

கொடி மாதுளை லேகியம்

சுக்கு, மிளகு, திப்பிலி மூலம், சித்திரமூலம், அதிமதுரம், சீரகம், பெருஞ்சீரகம் தாவாரநடி, வெட்பாலை அரிசி, சிறுதேக்கு, தேவதாரம் சந்தனம், வெட்டிவேர் வகைக்கு வராகனெடை -1 இஞ்சி பலம் 10 சாறு மாதிஞ்சு கரிசலாங்கண்ணிசாறு பலம் -1, தேன் பலம் -5 நெய் பலம் உ வெள்ளை சர்க்கரை பலம் -20 கொடி மாதுளை பழச்சாறு கிண்டி லேகியமாக்கி அந்தி சந்தி வேளைக்கு களாபாக்கு மறுபாதி சாப்பிடவும் தீரும் வியாதிகள் பித்தங்கள், இருமல், பித்தகாசம், வாந்தி, அரோசிகம், இதுகள் பத்தியம் இச்சா பத்தியம்.

கண்டங்கத்திரி லேகியம்

வாதம், வாதபித்தம், வாந்தி, இளைப்பு, அன்ன தோஷம், தின்பமே, இருமல் இதுகள் தீரும்.

இஞ்சிசார் படி -1 கண்டங்கத்திரிசார் படி -1 நெருஞ்சில்சார் படி -1 முள்ளங்கிசார் படி -1 பழச்சார் படி -1 ஆவின் பால் படி -உ பனைவெல்லம் பலம் -௮ நெய் படி -௭ தேன் படி -வ திரிகடுகு, சீரகம் ஏலம், வாய்விளங்கம் கிராம்பு தாளிசபத்திரி வகைக்கு பலம் -1 சரக்கெல்லாம் ஒருமிக்கப் பாண்டத்தில் விட்டு அடுப்பேற்றி சுண்டி வரும் போது வெல்லம் போட்டு பாகு வரும் போது கடைசரக்குகள் சூரணம் செய்து பாகில் போட்டு கிண்டி லேகிய பதத்தில் இளகி எடுக்கும் போது தேன் நெய் விட்டு கிண்டி கொண்டு கொட்டைப்பாக்களவு அந்திசந்தி மண்டலம் சாப்பிடவும்.

ஊக்கத்துக்கு

~~தொ~~ அரைக் ......தொடி, நீர்முள்ளி, கரிசலாங்
காணி பாசியை நீந்திக்கொடி இதுகள் சமம்
நிறைகடுகு வகைக்கு பலம்-1 வெள்ளாட்டுகோமயம்
படி-1 பசுங்கோமயம் படி-1 நல்லதண்ணீர்படி-1
மண்டூரம் பலம்-1 இதுகளை பானையில் நன்றாகப்
போட்டு கியாழம் வைத்து அந்திசந்தி ஆழாக்கு
அரை கொடுக்கவும். ✓

வங்கபற்பம்

அக்கரா, சித்தரத்தை, வால்மிளகு,
கிராம்பு, சுக்கு, மாசி அதிமதுரம் இதுகளை பொன்
வறுவலாக வறுத்து சூரணம் செய்து தேன் கலந்து
வங்கபற்பம் கூட-4 பணவிடை சேர்த்து கொடுக்கவும்
பத்தியம் புளிஉப்பு, புகை தவிர்க்கவும் மற்றது எப்படி
கொள்ளலாம். ✓

ஆவாரசின்படிப்பு உலர்த்தி மேற்படி
தவார்த்தி சரக்கு சூரணஞ்செய்து வங்கம் வராகனிடை -10
கொண்டு வந்து ~~மாதுளம்~~ ஈ. சல் இலை போலதட்டி கோணிப்பட்டை
யில்தான் பரப்ப வங்க . . . . சாயல்கொட

(இன்தொடர்ச்சி இலை காணவில்லை)
ப.ஜெ. [signature] 25/11/97

தாளிசபத்திரி லேகியம்

தாளிசபத்திரி, மிளகு, தும்பராஷ்டகம்,
சேராயம், திப்பிலிகட்டை, லவங்கப்பட்டை, லவங்கபத்திரி,
சீரகம், வெட்டிவேர், சாதிக்காய் கொத்தமல்லி சுக்கு
வகைக்கு பலம்-1 குமம் பலம்-2 சர்க்கரை பலம்-20
தேன்பலம் 40, நெய்பலம்-10 லேகியம் கிண்டவும்.

வெள்ளை நீர்ச்சுருக்கு, வெள்ளைப் பாருமியம் சதை
யடைப்பு இடுப்பு நோவு வயிற்று நோவு

அத்திப் பட்டை, நாவல்ப் பட்டை,
ஆதியம் பட்டை, ...இம்பு நெல்லிக்காய், எலுமிச்சம்
படிகம், வகைக்கு படி -ரு நல்லெண்ணை படி -ரு,
நெய்படி -ஞ தாளிசபத்திரி, ஏலம், கிராம்பு,
சாதிக்காய் பலம் -ந, தும்பராஷ்ட்டகம், அதிமதுரம்,
நிலப்பனங் கிழங்கு வகைக்கு பலம் -ந தேங்காய்
பால் விட்டரைத்து சாந்தாய்க் கரைத்து நல்லெண்ணை
நெய் விட்டு அடுப்பேற்றி பதத்தில் வடிகட்டி
அந்திசந்தி இரண்டு வேளையும் சாப்பிட்டு வர
வேண்டும். பத்தியம் - காலையில் ராத்திரிக்கு
பசுந்தயிர் பசுவின் பால் வறுத்த உப்பு போட்டுக்
கொண்டு துவரை வறுத்துப் பொடி செய்துக் கொண்டு
7 நாள் அல்லது 9 நாள் சாப்பிடவும் - மறுபத்தியம்
இச்சா பத்தியம் அறியவும்.

ராமபாண மாத்திரை

பாசாணம் பலம் -வ, தாளகம்
பலம் -வ - மனோசிலை பலம் -வ துரிசு பலம் -வ
சுன்னம் பலம் - 1 அரைத்து மாத்திரை பண்ணவும்.

காந்தசெந்தூரம்

காந்தம், அயம், உருக்குப்பொடி, கெந்தகம், ரசம், அரைத்து நாலு சாமம் எரிக்கவும். புளி . . . . . . சாத்தில் - 5 நாள் அரைக்கவும் மாதளையில் சாத்தில் - 5 நாள் அரைக்கவும். புளிப்பு மாதளைச் சாத்தில் - 5 நாள் அரைக்கவும். நந்திரசடை சாத்தில் 5 - நாள் அரைக்கவும். லிங்கம் சேர்த்து செந்தூரம் வைக்கவும். செந்தூரமாம் வங்க செந்தூரம் தவங்கபலம் - 5 நிமளைகா பலம் - 2 சூலகுபலம் - 2 சாமம் கிராகம் இடிக்கவும் செந்தூரமாம்.

ஊரப்பு செந்தூரம்

அயப்பொடி, வீரம், ரசம், கெந்தம் நவாச்சாரம் லிங்க மண்ணா அரைத்து செந்தூரம் பண்ணவும்.

வெண்கார மாத்திரை

சுக்கு, திப்பிலி, மிளகு, கசகசா, பெருப்பு சூண்டு வெண்காரம் வெடியுப்பு இந்துப்பு நேர்வாளம் காந்தம் கடுக்காய் கசாயம் விட்டரைத்து மாத்திரை பண்ணவும்.

சஞ்சீவி மாத்திரை

யுருஷ, நாபி, அரிதாரம், ரசம் கெந்தகம், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி வசைக்குபலம் - 1 வாலம் பலம் - 5 அரைத்து மாத்திரை பண்ணவும்.

மதுமேகரசாயணம்

தண்ணீர்விட்டான்கிழங்கு, நிலப்
பனைகிழங்கு, நெருஞ்சில் விதை, நன்னாரி வேர்
வெள்ளறுக்கின் பட்டை சங்கம் பட்டை குறுளன்
வேர் (தொடர்ச்சி இலைகள் காணவில்லை)

அப்பிரக்கு செந்தூரம்

கிருணா அப்பரக்கு வீராகனிடை 1
நவநீதம் பண்ணி எருக்கம்பால் நாலு சாமம் அரப்பு
வரகுன்னி நாசாமம் அரப்பு வெற்றிலை காசலாங்
கோணி நாலுசாமம் அரப்பு ஆலம் பழச்சார் நால
சாமம் அரப்பு முலைப்பால் நால்சாமம் அரப்பு
தைசபுடம் போடவும் செந்தூரமாம்.

அயச்செந்தூரம்

அயம்வீசை-1 சுத்தி பண்ணின
கெந்தகம் வீராகனிடை-1 ரெண்டையு உருக்கி
சந்தனத்தூள் பலம் -1 வெட்டிவேர்தூள் பலம் -1
மாத்திரை பண்ணவும்.

பரங்கிசக்கை சூரணம்.

பரங்கிசக்கை வீசை-1
சீரகம் வீசை-1 சிசுசெக்கை சாத்தில் 7-நாள் ஊறப்
போடவும். பழச்சாற்றில் ஊறப்போடவும்.

மிளகு பலம்-2 தாளிசபத்திரி பலம்-2 சூரணம் பண்ணவும். அப்பரக்கு செந்தூரம் கெந்தக பற்பம் லிங்க பற்பம் தாமிர பற்பம் இந்த நாலுஞ் சேர்த்து இந்த சூரணத்தில் சாப்பிடவும்.

சகல சுரத்துக்கு

துத்தம் பலம்-1, துரிசு பலம்-1 குப்பைமேனிச் சாற்றில் அரைத்து நாலு நாழிகை ஊறாமல் அரைத்து வழித்து வில்லை தட்டி அகலில் வைத்து சீலை மண் செய்து பத்து எருவில் புடம் போட்டு ஆறவிட்டு எடுத்து சீதசுரத்துக்கு ஒரு பணவெடை போடவும். அனுபானம் மோரில் சுண்ணாம்பு தண்ணியில் இஞ்சியில் தேனில் முலைப்பாலில் வெந்நீரில் கொள்ளவும்.

நமனாத சித்த தைலம்

வேப்பம் பட்டை வீசை 2, முருங்கை வேர் வீசை-2 நொச்சிவேர் வீசை-2 கருநொச்சி வேர் வீசை-2 சித்திரமூலம் வேர் வீசை-2 எருக்கம் வேர் வீசை-2 பொடியாகத் தரித்து யிடித்து ஒரு மரக்கால் தண்ணீர் வார்த்து எட்டிலொன்றாய் காய்ச்சி நல்லெண்ணை படி-2, நெய்படி-2 ஆமணக்கெண்ணைபடி-2 காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து வைத்துக் கொண்டு உள்ளுக்கு ஒரு கரண்டி கொள்ளவும் 84-வாயுவும் 21 மேகமும் தீரும்.

தாளிசபத்திரா லேகியம்

தாளிசபத்திரிபலம் -1, திப்பிலிபலம் -5
சுக்குபலம் ரு சீரகம் பலம் -5, சாதிக்காய் பலம்-௨,
சாபத்திரி பலம்-5, சித்தரத்தை பலம்-5, லவங்கப்பட்டை
பலம் -5, லவங்கபத்திரி பலம் -5, கேசரம் பலம் -5
லவங்கம் பலம்-௨, கற்கண்டு பலம்-1 கச்சிரக்காய்
பலம்-1 முந்திரிகைப்பழம் பலம் -1 தேத்தான்
கொட்டை பலம் -5, வால்வப்பழம் பலம்5 கடுக்காய்
பலம்-5, தாணிக்காய் பலம்-5 சர்க்கரை பலம்-5
பசுவான் நெய் ஒராகனடை த தேன்படி-௨ இதுவெல்லாம்
கிராதி பண்ணி சர்க்கரை போட்டு நெய் வாட்டு தேன் வாட்டு
பிசைந்து பாக்களவு உருண்டை பண்ணி இரண்டு
நேரமும் கொள்ள தீரும் வியாதி உடம்பு வீக்கம்
அதிசாரம், யாருமல் உப்பாதும் இளை இரைப்பு அக்கி
அண்டத்துக்கு இசிப்பட்ட வியாதியெல்லாம் தீரும்

வாதை மீட்டுத்தயலம்

எட்டிக்கொட்டை வாசை -௨ கிடைக்
கொட்டை வாசை -1 சிவனார் வேம்பு வாசை— 4
கெந்தகம் பலம் -2 தாளகம் பலம் -2 மனோசிலபலம் ௨

அந்தத்தயலம் பன்றவபரம்

நெல்லிக்காய்சாறு — 4
எலுமிச்சம் சாறு, பசுவான் பால்.. கிசுமசக்கைசாறு 6

பொன்னாங்காணி சாறு சிறுக்கீரைச்சாறு நரிபட்டந்த
சாறு, கரிசலாங்கண்ணிச்சாறு . . . . . வெத்திலைச்சாறு
கஸ்தூரிபலம் ஒரு, ஏலம் பலம் ஒரு, சுக்குபலம் ஒரு
சீரகம் பலம் ஒரு லவங்கம் பலம் ஒரு இந்த கடைமருந்தும்
எண்ணை - 4 இதுவெல்லாம் கலந்து ஆறுபடத்தில்
ஒரு சாமம் இருக்கட்டும் எடுத்து பிள்ளையார்
பூசை பண்ணி தூபம் காட்டி அடுப்பு போல் வைத்து
ஒரு ஜாதகா எரியவிட்டு பதம் வரும்போது ஆ வாசனை
வரும் அப்போ மறக்கிக் கொண்டு தலைமுழுகவும்.
உச்சிகரண்டி உள்ளுக்கும் கொள்ளவும்.

கிராணிமருந்து

அத்திப்பிஞ்சு, கோவை பிஞ்சு
களிபாக்கு காசிக்கட்டி காட்டுமரப்பட்டை
இதுவெல்லாம் சமன் கொண்டு கல்வத்திலிட்டு
வாழைப்பூச்சாறு விட்டு அரைத்து சுண்டைக்காய
பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி
அனுபான மறிந்து கொடுக்கவும். கிராணி தீரும்.

பல்நோவுக்குப் பொடி

நெல்லிக்காய் பலம்-1, உப்பு
பலம்-1 ரெண்டையும் சின்ன குழவியில் போட்டு
இத்தை புடமிட்டால் காயாகும் - அந்தகாயை
கல்வத்திலப் பொடித்து பல் தேய்த்தால் நோவு
நிற்கும் சூடத்தண்ணீரை வார்த்து கொப்பளிக்கவும்.

மிளகு கற்பம்

மிளகு பலம்-1, கரிசலாங்கண்ணிச் சாற்றில் ஊறப்போட்டு 20 நாள் சென்ற பிறகு முதல்நாள் ஒன்று சாப்பிடவும் 2ம் நாள் இரண்டு சாப்பிடவும். இப்படி 40-நாளைக்கு நாளுக்கு நாள் ஒன்றை சேர்த்துக் கொள்ளவும். இந்தப் பிரகாரம் சாப்பிட்டால் இதில் தீரும் வியாதி மேகப்படை, மேகவெட்டை, நீர்ச்சுருக்கு அஸ்திசுரம், இளைவாய்வு நரம்புசிலந்தி, புண்கள் சுவாசங்கள் இன்னும் அநேக வியாதி தீரும் பிறந்து கட்டிப்போம்...... போகம் பண்ணாமலே (தேகம் கெட்டுப் போகும்.) கைகண்டது பத்தியமில்லை

இதற்கு பிறகு ஓலை எண் 31 தொடங்கி 108 வரை உள்ளது.

தானென்ற வாயுரர் அக்கினி மந்தம்
திறமான இளையோடு கைகால் காந்தல்
பானென்ற பித்தமது நாற்ப தும்தான்
பறக்குமடா மண்டலத்தில் பரிந்து கொண்டு
வேனென்ற பத்தியந்தான் புளிதை தப்பு
ஊளங்கயதோர் அளகையோடு பெண்ணுந் தள்ளே

66

தின்னப்பா திரிலோகம் வைத்துக் கொண்டு
திடமான வாளரச செந்தூ ரந்தான்
தொன்னப்பா லோக செந்தூரம் வைத்து
கிரையாமல் பணவிடைதான் வைத்துக் கொண்டு
தின்னப்பா சாத்தவென்ற தெல்லாம் போகும்
கருவான சேத்துமங்கள் தொண்ணூற் றாறும்
ஊன்னப்பா நடஞ்சுக்கும் கண்டு கொண்டு
ஊருதாக யுன்னமொரு சேதி கேளே

67

கேளப்பா மகரகண்டல் சுந்திர யாம்
திறமையுள்ள லேகியந்தான் சொல்லக் கேளு
ஆளப்பா ஆத்துமுள்ளி பலநூ றாகும்
நலமான கரிசுள்ளி யதற்குப் பாதி
தாளப்பா சித்தாமுட்டி பேரா முட்டி
நலமான முளகரணை கொடுவேலி கிளாவும்
ஆளப்பா ஆதன்டை சிறுகாஞ் சொறி
அப்பனே முக்காவேளை வாலாமிச்சை யாமே

68

ஆமப்பா கோரையுடன் உத்தா மணி
அப்பனே கழற்கொடி மாதுளை விதை
தாமப்பா வகையொன்று பலமொன் றாக
தவறாமல் லிடித்துயொரு தூணி நீரில்
வேமப்பா வெட்டொன்றா யருந்து வாங்கி
ஊருதான சொம்மட்டு படிச்சார் கேளு
நாமப்பா படியரையாய் கூட்டு
நலமான ஆவின்பால் படிதான் ரெண்டே

69

ரெண்டான சக்கரைதான் பலதும் வைத்து

(இராமன் 31 காணவில்லை) பரத்துக்கும் அண்ணாவி

நிலவாக கரைத்ததிலே பாகு சேரன்
கண்டான கடைசரக்கு சொல்லக் கேளு
குருவான திராட்சை திரவ லாதி
நன்றான சுங்கியோடு யருசீர கந்தான்
நலமான அரத்தை அக்கிரா லவங்கப் பட்டை
தன்றான லவங்கம் சாதிக்காய் பத்திரி
நாமமான பேரரத்தை லவங்கப்பத்திரியும் கூட்டே
20

கூட்டுவாய் வகையொன்று பலமொன் றாக
கூசாமலாறு பாய் இரா[illegible]ணைந்து
நாட்டுவாய் பாகிலே தூவக் கிண்டி
நலமான தேன்படி நெய்யரைதான் ஊட்டு
காட்டுவாய் பொங்கும்போல கிண்டி கிண்டி
கூசாமல் மங்கானில் வைத்து வைத்து
நட்டுவாய் லேகியந்தான் அன்னக்காய் அதம்
திறமாக மண்டலத்தின் திரும்நோய் கேள்
21

கேளப்பா சயரமெட்டு தின்ம மெட்டு
கொடியான அாதரமன்ற யென்பதும் போம்
நாளப்பா யரைப்பரளைப்பு ஊதநீர் கோர்வை
நாடாது யாசுவல கலம்பா தங்கள்
தாளப்பா கெற்பவைட்டை கெற்ப குன்ம
தவறுண்டே போகுமடா சுகிக்க எல்லாம்
ஆளப்பா தாளகமும் லோகங் கூட்டி
அப்பனே கொண்டுவர தீரும் பாரே 72

பாரப்பா கபாடமென்ற லேகியஞ் சொல்வேன்
பண்பான நாகமோடு அரசு அத்தி
சேரப்பா கருங்காலி ஆதயம் பட்டை
திறமாக பலம்பத்து நிறுத்துக் கொண்டு
சாரப்பா யடைத்துநைய தூள் நீரால்
. . . . . . அருப்பெற்றி யெட்டொன் றாக்கி
வாரப்பா பனவெல்லம் பலந்தான் பத்து
வளமாக கரைந்துயதில் பாகு செய்யே 73

பாகுலே தூவதற்கு மருந்து கேளு
பதறாதே கஞ்சாவை சுத்தி செய்து
பாகிலே பலமொன்று தூக்கிக் கொண்டு
பாங்காக சுக்கு சீரக மிளகு
பாகலே ஏலமோடு கிராசாணி ஓமம்
பருவமாய் திரிகடுகு தாட்டாத்தி ஆவும்
பாகலே சிறுநாகம் அால் மிளகு
பக்குவமாய் மல்லியோடு யேல மாமே 74

ஆமப்பா கிராம்பு சாதி பத்திரி
அப்பனே சாதிக்கா யதிமதுரம் திப்பிலி
ஆமப்பா வகைக்கொன்று பலமாய் நாக
நலமாக யாவறுப்பாய் சூர ணித்து
வேமப்பா பாகிலே தாவுக் கிண்டி
வெகுசுருக்காய் தேன்நெய்யும் வாட்டுக் கிண்டே
தாமப்பா மூவ்காலம் சேதனம் பண்ணு
தப்பாமல் மண்டலந்தான் பாக்காவு சொல்லே 75

அளவாக கொண்டுவரத் தீரும்நோய் கேள்
அப்பனே குஷ்டகா கிராணி வாய்வு
பாளவாக கருப்புசுதல் பாண்டு கிராணி
பாங்கான பேதி.... உஷ்ண வாய்வு
கலவாக சூசந்தின் கிராணி ......
.... பாத்த வாய்வு
உளமாக கிராணியெல்லாம் தீரும் தீரும்
உகையாக யன்னமொன்று வரிசை பாரே 76

பாரப்பா திப்பிலி ரசாயனந்தான் சொல்வேன்
பககின்ற திப்பிலிதான் பலந்தான் பத்து
சேரப்பா மிளகு அஞ்சு சுக்கு அஞ்சு
திறமான இருசீரகம் ஆமம் ரெண்டு
ஆரப்பா அரத்தைரெண்டு தாளிசை பத்திரி
அப்பனே லவங்க பத்திரியும் பட்டை
காரப்பா திரிபலையும் லவங்க லேலம்
கனமான கொடிவேலி பலமொன்று தூக்கே 77

தூக்கியே யாளவறுப்பாய் சூர ணத்து
.... கரைதான் சூமனாய் சூட்டி
தாக்கியே தேன்வட்டு பிசைந்து கொண்டு
தப்பாமல் வெருகடிதான் கொள்ளும் போது
தேக்கியே யாளப்போடு பீனை காசம்
திறமான செத்துமகோய் தொன்னூத் தாறும்
நீங்கியே உசரத்தில் வாயு வெள்ளசம்
நீங்குமொரு மண்டலத்தில் நினைவாய் பாரே
78

பாரப்பா புலத்தியரே மேகவகை தீர
பண்பான மதுப்மணிதான் சொல்லக் கேளு
சேரப்பா சினப... அசுக்கரா வேர்
திறமான வகையொன்று புலம்பத் தாகும்
சாரப்பா நிலப்பனைவேர் பலந்தா ணிக்க
தாளமான தண்ணீர்விட்டான் பலந்தான் ரெண்டு
ஆரப்பா . . . . மேலம்
அப்பனே திரிகடு திரிபலை யாமே
79

ஆமப்பா லவங்கதோல் லவங்க பத்திரி
அப்பனே சிறுநாகம் வாய் விளங்கம்
போமப்பா மல்லாரு சீரகம் ஏலம்
புகழான .... அரத்தை கெந்தம்
நாமப்பா சிறுதேக்கு கண்டங் காலி
நயமான கொடிவேலி விளாமிச்சை ஏலம்
தாமப்பா தக்கோலம் வால் மிளகு
தாளமான சந்திரகை பேரிச்சம் கூட்டே
80

கூட்டமவே வெட்பாலை தாமரைக் கிழங்கு
திடமான சாதிக்காய் கிராம்பு பத்திரி
நாட்டடா கருவேம்பா ளைல உளைக்கு
நலமாக பலமொன்று நிறுத்துக் கொண்டு
கோட்டடா யேலவறுப்பாய் சீர ணித்து
கருவான கிங்குமப்பூ ரோசனை கற்தூரம்
வாட்டடா கலிக்கிநிறை பொடித்துச் சேர்த்து
வளமான சர்க்கரைகூசா நாலு பாங்கே ௮௧

வாங்கியே அவன்பால் படிதா னாலு
வளமான சர்க்கரையை கரைத்துக் கொண்டு
பாங்கியே பாகொட்டக மாகும் போது
பதறாதே கிரணத்தை பார்த்து கண்டு
தேங்கியே அவன்றுநெய் படியளைதான் வாரு
திறமான தேனதிலே படிதா னப்பா
வாங்கியே ஏலக்கிபோல் கிண்டி வாங்கு
வளமான பூங்கானில் பதனம் பண்ணே ௮௨

பண்ணப்பா யருகேநரம் பாக்களவு உண்டிட
பகருவேன் திருகிறை சாயாதி கேளு
புண்ணப்பா கிரந்தியோடு சிலைல் தீரும்
புதுமையாம் கண்டத்தின் மாலை தீரும்
நண்ணப்பா வாதமோடு வாய்வு எல்லாம்
நாடாது பாரமையக் கண்ணிங்கப் பத்து.
தண்ணப்பா சொற்றுமநோய் தொண்ணூத் தாறும்
தவறுண்டோ போகுமடா பத்தியந்தான் காரே ௮௩

சஅபாக்கிய சுண்டி

காரப்பா உத்ததோர் நோய்கள் கெல்லாம்
. . . . . சவுபாக்கிய சுண்டி கேளு
நேரப்பா சுக்குதான் பலந்தா னெட்டு
நலமாக . . . . தீஹப் போட்டு
சாரப்பா மெச்சுரைவரை பிறமா ணந்தான்
தவறாமலே நாரிக்கி அதுர்சட் டிக்குள்
சேரப்பா செம்முள்ளி தச்சீந் திரயும்
திறமான முருக்கிலையும் காரிசாலை யாமே
84

ஆமப்பா செறுசெருப்பு காத்து தூட்டி
அப்பனே சாறுவகை படிகால் தூக்கம்
நாமப்பா அதுச்சட்டி சுத்கள் ஊட்டு
நலமாக வெவ்வேறே ரஹாயு எர்த்தி
தாமப்பா யாதத்துநன்றாய் சூர ணித்து
நலமாக வடிகொண்டு அப்பால் சுவைத்து
போமப்பா கார்கோல் வாதுவினை உந்து
சுகமான உகைநீர் காயவேளவ் கூட்டே
85

கூட்டப்பா வாய்வுவாய் தாணிக்காய் நெல்லி
கூறான திப்பிலியும் கிலுஞ் செவ்வியம்
நாட்டப்பா வகையொன்று பல . . . .
நலமாக யாலவறுப்பாய் கிர ணத்து
காரப்பா அருக்கறா பொன் குசட்டை
கூறிவான கண்டங் கத்திரி நன்னாரி
நீட்டப்பா நிலப்பனையும் வகையொன் றுக்கு
நினைவாக பலம்ரெண்டு நிறுத்துக் கொள்ளே
86

கொள்ளப்பா சுத்திசெய்து யரைத்துத் தூளாய்
கு......ாக வடிசெய்து வைத்துக் கொண்டு
உள்ளப்பா சூவகைதான் ஒன்றாய் கூட்டி
உளங்கவே சமனாக சக்கரையை —
நல்லப்பா ஆவின்பால் படிதான் ரெண்டில்
நலமான சக்கரையை கரைத்துக் கொண்டு
அள்ளப்பா அடுப்பேற்றி பாக தானாய்
அப்பனே குன்தூளைக் கொட்டிக் கிண்டே

87

கிண்டப்பா தூளாக நன்றாய் கிண்டி
கிருமையாம் பதுக்க வசந்தனை லடைத்து
நன்றப்பா வெருகடிதான் யருநேரங் கொள்ள
நலமாக தீரும்நோய் தாலை கேளு
சிண்டப்பா சூலவகை யாவுந் தீரும்
சிதளான மாரடையங்கள் குதிகொ வாய்வு
கண்டப்பா வாதமோடு பித்த மெல்லாம்
கண்டானா தோடமடா கண்டு கொள்ளே

88

சொல்லவே ஆந்திரமாம் வாய்வு தீரும்
தீறான வேகவகை வாத குன்ம
சொல்லவே அக்கினியா மாந்தந் தீரும்
தீறான வாயூறல் வாய்க சப்பு
சொல்லவே வயித்திலுள்ள வியாதி யெல்லாம்
கிடப்போகும் சவுபாக்கிய மீண்டி யென்றார்
சொல்லவே பத்தியந்தான் புளிகை சப்பு
தீறான அளைகையாடு பொல்லாதுந் தீர்லே 89

அக்கினிச் சுரணம்

தள்ளப்பா அக்கினியாம் சுரணஞ் சொல்வேன்
தலமான கொடிவேலி திரிகடுகு சூடம்
உள்ளப்பா சிறுதேக்கு ஆனைத்திப்பிலி கோஷ்டம்
இலவங்கப்பத்திரி ரெண்டுவகை யொன்றாய் வந்தான்
நள்ளப்பா காயங்கள் வசம்பு காலந்தான்
நலமான கடுகுரோகிணி அரைப வந்தான்
தெள்ளப்பா யிளவறுத்தாய் சூர ணந்து
திறமாக சுக்கியால வெந்நீரில் தொள்ளே 90

திராதராட்சத சூரணம்

வெந்நீரில் வெண்ணெய்தனில் வெருகடிதான் கொள்ள
வேறான சூரணவகை உதர வாய்வு
வெந்நீரில் சூதவாய்வு வாத மெல்லாம்
பறக்குமடா திராதராட்சச் சூரணங் கேளு
தன்ன . . . சுந்திரிகை பேரிச்சம் . . . .
தலமான அதிமதுரம் சுக்கா வேரை
நன்னீரில் யேலமொரு சித்தக் காசு
நலமான யேலமோடு கிராம்பு கூட்டே 91

கூட்டுவாய் கொத்தமல்லி சீரகம் வேரி
கூறான திப்பிலியும் கூகை நீறும்
நாட்டுவாய் சாதிக்காய் சாதி பத்திரி
நலமான வால்மிளகு லவங்க பத்திரி
ஆட்டுவாய் வகையொன்று பலமொன் றாக
அப்பனே சூரணித்து சக்கரையை கூட்டி
வெட்டுவாய் வெருகடிதான் தேனில் கொள்ள
உறுதாக திருமநோய் வாம்பச் சேலே 92

கேளப்பா அந்திரமளம் வாய்வு பாண்டு
கொடியான தாபசுரம் மயக்கந் தூக்கம்
வாளப்பா ரத்தவகை நாற்ப துந்தான்
வளமான அரோசிகங்கள் அன்னந்தி ரெட்சும்
நாளப்பா உஷ்ணநோய் யெல்லாந் தீரும்
நலமான சேத்துமங்கள் அக்கனி மாந்தம்
தாளப்பா கைகயெரிவு காந்த லெல்லாம்
தவறுண்டோ போகுமடா நெய்யுங் கொள்ளே
93

அசுவகெந்திச் சூரணம்

கொள்ளவே அசுவாகெந்தி சூரணஞ் சொல்வேன்
குலமான லவங்கமொன்று நாகப்பூ ரெண்டு
தள்ளவே யேலம். மிளகு. திட்டு . . . . .
தலமான திப்பிலி யிரட்டிச் சுக்கு
வள்ளவே பூப்பத்தி. இரண்டும். . . கூட்டி
. . வளமான அசுவாகெந்தி அறுமந்தி நாலும்
நல்லவே சந்திரவ உலர்த்தி கொண்டு
நலமான யாவதுப்பாய் சூரணஞ் செய்யே
94

செய்யப்பா . சி.உ.வன் சர்க்கரை கூட்டி
திறமான ஆவின்பால் நெய்பால் கொள்ள
வையப்பா வெருகடிதான் கொள்ளும் போது
கனமான மேகவகை யெல்லாம் போகும்
மெய்யப்பா அஸ்திசுரம் அஸ்தி வெட்டை
மேலான சுவாசமோடு யீளை போகும்
ஐய்யப்பா மேகத்தின் பாண்டு போகும்
தாமான ஊறல் யெல்லாம் சாகுந் தானே
95

கண்டாத்திரி குரணம்

சாரவே கண்டாத்திரி குரணத்தை சொல்வேன்
தருவான யிஞ்சியது பலந்தான் பத்து
சேரவே மேல்த்தோலை போக்கிப் போட்டு
செருகவே நாலிலொன்று படிச்சா றாட்டி
தாரவே நாலொன்று உறைப் போட்டு
தவறாமல் மறுநாள்த் தான்ரவா புளித்தி
ஆரவே சிரகந்தான் பலந்தா னொன்று
அப்பனே முன்போல படிசா றாட்டே 96

ஊட்டியே மறுநாள்த்தான் காயப் போட்டு
உத்தமனே மின்கோடு தூளசு பத்திர
நாட்டியே திப்பிலியும் யேலங் கிராம்பு
நலமான கோஷ்ட மோடுவாய் ஜாதிக்காய்
வாட்டியே யிலவங்கப்பாய் சூர ணித்து
வளமான சர்க்கரைதான் சமனாய் கூட்டி
நீட்டியே வெருகடிதான் கொண்டா யானால்
நீங்கிவிடும் பித்தமதில் வாய்வு போமே 97

போமப்பா அரோசிகங்கள் அனந்தி ரேச்சம்
புகழான பித்தவெட்டை பொருமல் வாய்மல்
நாமப்பா வாயுவோடு வாத மெல்லாம்
நாட்டாது கிண்ணியெல்லாம் நாளை மாகும்
சேமப்பா வயத்துவல்லி வாயாதி யெல்லாம்
திறமாக தீர்ந்துவிடும் பத்தியங் கார
நாமப்பா உலககோர்க்கா யாரங்கச் சொன்னேன்
நலமான குரணத்தை நாட்டிப் பாரே 98

தாளிசபத்திரி சூரணம்

நாட்டிலே சொல்லுகிறேன் புலத்தியரே அய்யா
நலமான தாளிசபத்திரி சூரணந்தான்
காட்டியே தாளிசபத்திரி பலந்தான் பத்து
கருவான திரிகடுகு திரிபலாதி
நீட்டியே கோஷ்டமொடு அக்கிரா காரம்
நின்றவாத அத்தித் திப்பலியுஞ் சீரகம்
கூட்டியே கொத்தமல்லி வாய் விளங்கம்
கூறான கிராம்பேலம் சாதிக் காயே
99

காயொடு பத்திரியு மாசிக்காய் சோம்பு
கருவான வால்மிளகு லவங்கப் பட்டை
தாயோடு யிவையெல்லாம் பலமொன் றாக
தவறாமல் சூரணித்து வடியே கொண்டு
சேயொடு சர்க்கரைதான் சமனாய் கூட்டி
திறமாக பசுநெய்கொண்டு வெருகடிதான் நேரம்
மாயொடு யிருநேரங் கொண்டா யானால்
வால்குன்மம் சயகாசம் யீளை போமே
100

போமடா அஸ்திசுரம் அஸ்தி வெட்டை
பொறுக்காத நீர்தாகம் புண்ணாம் நெஞ்சில்
நாமடா பித்தவெட்டை பித்த பாண்டு
நாடாது கிராணிவகை யெல்லாந் தீரும்
தாமடா அரோசிகங்கள் அன்னத்தி ரேட்சம்
தளராத வாய்மலோடு வாக்கல் விக்கல்
சாமடா சுவையறு உடம்பு காந்தல்
சாதகமாய் புளியோடு புகையுந் தள்ளே
101

பஞ்ச தீபாக்கினி சூரணம்

தள்ளவே பஞ்ச தீபாக்கி னியாம்
தரமான சூரணந்தான் சொல்லக் கேளு
உள்ளவே திரிகடுகு சீரம் ஏலம்
உதமான வகையொன்று பலந்தா னொன்று
தள்ளவே யாவறுப்பாய்ச் சூர ணித்து
நலமாக வழுதைகொண்டு சர்க்கரைதான் சேர்த்து
தெள்ளவே தேன்நெய்யில் வெருகடிதான் கொள்ள
தீரமாக தீரும்நோய் செப்பக் கேளே 102

செப்புகிறேன் உஷ்ணநோய் குன்ம வாய்வு
சேர்ந்துவந்த வாய்வோடு சேத்தும ரோகம்
தப்புகிறேன் பொருமலோடு சோகை மந்தம்
தருவான மயக்கமோடு கிறுகி றுப்பு
வெப்புகிறேன் அஸ்திசுரம் அஸ்தி வெட்டை
வேரான குலத்தின் வாய்வு தீரும்
நப்புகிறேன் பாகைப் புகையுந் தள்ளு
நலமான காந்தம்வைத்து நலமாய்க் கொள்ளே 103

நிலவாகைச் சூரணம்

நலமான சூரண மொன்று சொல்லக் கேளு
நன்றான நிலவாகைச் சுக்கு சுட்டு
பலமான ~~சாலம்~~ வாய்விளங்கம் ஓமம்
பேராக வகைக்கிரண்டு பலமே தூக்கி
சிலமாக ~~கிட~~ கிடாரத்தில் ஊறப் போட்டு
சிதறாமல் அரைத்து சூரணமே செய்து
நலமான சர்க்கரை சமனாய் கூட்டி
தவறாமல் வருநோய்கள் கொண்டால் கேளே 104

கேளப்பா வாய்வு வென்ற தெல்லாம் போகும்
கெடியான சுந்தமெல்லாம் தீரே சாரும்
வாளப்பா உதரநோய் யெல்லாந் தீரும்
ஊளமான பொருமலோடு ஊம்மல் தீரும்
தாளப்பா சிலேட்டும நோயெல்லாந் தீரும்
தளமான ஊக்கலோடு வாந்தி தீரும்
நாளப்பா உடம்பெரிவு சுவாச காசம்
நன்றாக தீருமடா சார்ந்துக் கேளே

105

சாத்துறேன் ஊரருக்கள் மலபந் தங்கள்
தளமான . . ஊக்க லருமல் தீரும்
தேத்துறேன் இன்மமைட்டு மகோத ரங்கள்
தெளிவாக வாய்வெல்லாந் தீருந் திரு.
ஆத்துறேன் கெர்ப்பவலி கெர்ப்ப ரோகம்
ஆச்சரியம் அருக்கமெல்லாம் அகன்று போமே
காத்துறேன் வென்னிரல் கொண்டவ யானான்
கலங்காதே பயத்திரல்ல ஊயாதி போமே

106

உசிலாரை சூரணம்

போமப்பா சூரணமொன்று சொல்லக் கேளு
புதுமையாம் உசிலாரை பாலில் போட்டு
நாமப்பா அமுத்துலர்த்தி காயப் போட்டு
நலமாக சூரணித்து பலம்பத் தானால்
தாமப்பா கிராம்பேலம் சாதிக் காயும்
தளமான பத்திரியு மாச்சக் காயும்
தேமப்பா தாளிசபத்திரி திப்ப லாதி
திறமாக யாவருப்பாய் சூரணந்தான் செய்யே 107

செய்யப்பா வுதையொன்று பலமொன்று
ரெண்டுமொன்றாய் சேர்த்துக் கொண்டு
மைய்யப்பா சர்க்கரைதான் சமனாய் கூட்டி
பதறாதே வெருகடிதான் நெய்யிற் கொள்ள
சுரபித்த மேகமெல்லாம் மண்டேபோம்
சிரத்தில் காள்கையெல்லாம் சாந்த மாகும்
கையப்பா பாரமெங்கள் சிரந்தி வெட்டை
கெடமான உஷ்ணநோய் காணா தென்னே /108

காணாது நீர்க் கடுக்கல் நீரெரிவு
கண்ணெரிவு கண்புகைச்சல் காணா தோடும்
தோணாது உடம்பெரிவு சீலுங் கூடு
சுருக்கான நீர்க்கூடு குளுந்து போகும்
நாணாது மதுமேகம் தந்தி மேகம்
நாடாது சயரோகம் நாளின மாகும்
தோணாது தேகமெல்லாம் குளிர்ச்சி காணும்
தொண்டுவா அப்பாரதம் வைத்துக் கொள்ளே /109

மேகத்துக்கு சங்கிலை சூரணம்.

கொள்ளவே சங்கிலை சூரணஞ் சொல்வேன
திணமான சீந்திற்புத் தண்டு வாங்கி
அள்ளவே மேல்தோலை போக்கிப் போட்டு
வெகுளாதே நறுக்கியதை புலரப் போட்டு
கல்லவே யிடித்துநன்றா சூர ணித்து
கருவாக வடிகொண்டு படித்தான் வாங்கி
நல்லவே சின்னத்தில் சத்தி செய்யே
நலமான பொடிபடிக்கி அரைபணப்டா படியே /110

படியாக அரப்படிதான் நீர போட்டு
பாங்காக ரசபுஷ்பந்தி காய்ந்த பாஞ்சு
அடியாக உரலாட்டு யடித்துக் கொண்டு
அப்பனே சாதிக்காய் சாதி பத்திரி
கடிதாக துன்பலகு யேலங் கிராம்பு
கசகசா தாளிச மாச்ச காயும்
அடிவாக யளவறுப்பாய் கூர ளாந்து
உளமாக வளைக்கொரு பலந்தான் கூட்டே
111

கூட்டியே ரெண்டுமொன்றாய் சேர்த்துக் கொண்டு
நிறையாம லாறுபலந் தீனி சேர்த்து
நாட்டியே வெருகடிதான் நெய்யில் கொள்ள
நலமாக தீரும்நோய் நவலக் கேளு
நாட்டிகமாய் மேகநீ ரிருவதும் போம்
சாமமான பாரமயங்கள் மேக மெல்லாம
வாட்டியே பயத்தியமா மேக மெல்லாம்
வளமாகும் அஸ்திசாரம் கொட்டை போமே
112

போமப்பா மூலத்தின் சூடு போகும்
சொல்லாத ரத்தவளை யெல்லாம் போகும்
நாமப்பா கண்ணெரிவு கைகால் காந்தல்
நாடாது தேகமெல்லாம் குளிர்ச்சி காணும்
தாமப்பா உறலெல்லாந் தவறுண்டே போம்
தலமான கபாலத்தின் ரணங்கள் தீரும்
வேமப்பா வளரச - இந் தூ. ரூ. ரு. தாள்
செவ்வங்கால் பணவிடை யப்பாரகல் கேளே தெர்ணமே
113

ரசபதிச் சூரணம்

சொல்லவே ரசபதிச் சூரணந் கேள்
சுகமான லவங்கமொன்று பலமதி ரெண்டு
அல்லவே நாகமணல் தாளிச மொட்டு
ஆதமான சுக்கதிற் பதினா றாகும்
நல்லவே சுக்குதான் முப்பத்தி ரெண்டு
நலமான யேலமது அறுபத்தி நாறு
கல்லவே சர்க்கரைதான் சமனாய்க் கூட்டி
கலந்துமது கலசமதில் பதனம் பண்ணே

114

பண்ணவே வெருகடித்தான் யருநோய் கொள்ள
பறக்குமடா பித்தமோடு அதசம் வாய்வு
தண்ணவே கிரந்தி ரணபவ கிரந்தி
தலமான சேமவுறன் சொறி சிரங்கு
நண்ணவே கிலரடங்கள் நாடா தோரும்
நலமான குட்டமோடு குறைநோய் தீரும்
பெண்ணவே பெரும்பாடு சூம்பு சிக்கி
பின்பாரா தெருமடா யிவ்வனந் கேளே

115

அசுவகெந்தி தயலம்

இன்றான உலகத்தோர் நோய்கட் கெல்லாம்
உரைக்கிறேன் தயலமொன்று உசித மாக
நன்றான அசுவ கெந்தியல் ரசச்சத
நானென்ற சூமமது நூலக் கேளு
சென்றான அசுவகெந்தி பலந்தான் போடு

(இதன் தொடர்ச்சி இல்லை காணவில்லை)

சத்தானந்த வயிரவ மாத்திரை

பாரப்பா அகத்தியனே சத்தா னந்தம்
பாரமான வயிரவந்தான் சொல்லக் கேளு
சேரப்பா திரிகடுகு திகைப்பு நாபி
திறமான வெரிச்சலோடு பொரிச்ச லேழும்
திரப்பா சுமன்கட்டி படிச்சா றாட்டி
நிசமாக நாள்சாம மரைத்துக் கொண்டு
தாரப்பா குன்றிபோல் நிழலுலர்த்தி
தப்பாமல் செய்பனைவைத்து சொல்லக் கேளே 1

கேளப்பா இஞ்சி நீருள்ளி தயிலம்
கொடியான சினைப்பாலில் கொடுத்தா யானால்
நாளப்பா சன்னிவகை யெல்லாம் போகும்
நலமாக தேன்கட்டி கொடுத்தா யானால்
தளப்பா தோஷமென்ற தெல்லாம் போகும்
தப்பாது கண்ணோடத் தீரும் தீரும்
தெள்ளப்பா ஆனந்த வயிர வந்தான்
